பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 17 வியாழக்கிழமை (01.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 96

# தெற்கு ஆழ்கடல் பகுதியில் மர்மக் கப்பல் மூழ்கடிப்பு

## புலிகளுடையது என்கிறது கடற்படை

கொழும்பு, மார்ச் 1

இலங்கைக்குத் தெற்கே ஆழ்கடல்பரப்பில் சென்றுகொண்டிருந்த அடையாளம் தெரியாத கப்பல் ஒன்றைத் தாங்கள் தாக்கி அழித்திருக்கின்றனர் என்று கடற்படை அறிவித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் எனச் சந்தேகிக்கப்படும் இக்கப்பல் வெடித்துச் சிதறி கடலில் மூழ்கியது என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

காலி தெய்வேந்திர முனை (தெவுந்தர) டற்பரப்பிலிருந்து மிகத்தொலைவில் - ழ்கடல் பரப்பில் இலங்கைக்கு வந்து காண்டிருந்த கப்பல் ஒன்றையே இலங்கை டற்படையினர் நேற்று தாக்கியழித்துள்ள ர். வெளிநாடொன்றில் இருந்து புலிக நக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பலே து என்று கடற்படைப் பேச்சாளர் டி.ஜே.வி. தஸநாயக்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கடற்படைப்பேச்சாளர் இதுபற்றி மேலும் கூறுகையில் :-

தெவுந்தர கடற்பரப்பில் - 230 கடல் மைல் தொலைவில் - இன்றுகாலை (புதன்) - கடற்படையினர் இரண்டு படகுகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அச்சமயம் இலங்கையை நோக்கி 75 மீற்றர் நீளமுள்ள கப்பலொன்று வந்து கொண்டிருந்தது. அது எந்த நாட்டைச் சேர்ந்தது என்று அடையாளம் காணும் வகையில் கொடி எதுவும் அதில் கட்டப்பட்டி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் இருந்து நேற்று ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 1

முகமாலை முன்னரங்க நிலைகளிலிருந்து படையினர் நேற்று அதிகாலை சுமார் 5 மணிமுதல் 7.30 மணிவரை வடமராட்சி கிழக்கை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சில நாள்களாக படையினர் வடமராட்சி கிழக்கு மற்றும் பச்சிலைப்பள்ளி, பளை ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக குறித்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் பெரும் பீதியுடன் வாழும் நிலை தோன்றியுள்ளது. (அ-4)

## மணலாறில் கிபிர் தாக்குதல்

முல்லைத்தீவு, மார்ச் 1

முல்லைத்தீவு மாவட்டம் நாயாறுப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது நேற்றுப்பிற்பகல் கிபிர் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின. பிற்பகல் 4.30 மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர்.

இதேவேளை- மணலாறுப் பகுதியில் நேற்று அதிகாலை 2.30 மணிக்கும், பிற்பகல் 4 மணிக்கும் இராணுவத்தினர் சரமாரியான பல்குழல் மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நாயாறுப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள்மீது ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் அப்பகுதி மக்கள் பெரிதும் அல்லோல கல்லோலப்பட்டனர். (க)

## மேலும் 150 இலங்கையர்கள் ஆஸ்திரேலியா செல்லக் காத்திருப்பு

ஜகார்த்தா, மார்ச் 01

அரசியல்தஞ்சம்கோரி ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக மேலும் பல இலங்கைத் தமிழர்கள் இந்தோனேசியாவில் காத்திருக்கின்றனர் எனத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

சுமார் 150 இலங்கையர்கள் இவ்வாறு ஆஸ்திரேலியாவுக்கு கடத்தப்படுவதற்காகக் காத்திருக்கின்றனர் என்று இந்தோனேசியாவின் உள்ளூர் பத்திரிகை ஒன்றில் தகவல் வெளியாகி இருக்கின்றது.

ஆனால், இந்தோனேசிய நாட்டு குடிவரவு அதிகாரி ஒருவர் இதனை மறுத்திருக்கின்றார். புதிதாக இலங்கையர்கள் எவரும் ஆஸ்திரேலியாவுக்கு கடத்தப்படுவதற்குத் தயாராக உள்ளனர் என்பதை தாம் அறியவில்லை என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

''இந்தோனேசியாவினுள் சட்ட ரீதியா

(04ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டிலிருந்து வெடிபொருள்களை கடத்திவரும் தேவை புலிகளுக்கு இல்லை

## அங்கு தமிழீழ உணர்வலையை ஒடுக்கத் திட்டமிட்ட பொய்ப்பிரசாரம் என்கிறார் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, மார்ச் 1

நாம் எமது மண்ணில் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்துடன் போரிட்டு அவர்களிடமிருந்தே பெருமளவு இராணுவத் தளபாடங்களையும், ஆயுதங்களையும் பெற்றுக்கொள்கிறோம். இந்தியாவில் இருந்தோ, தமிழ்நாட்டில் இருந்தோ ஆயுதங்களையும், வெடி பொருள்களையும் கடத்த வேண்டிய தேவை எமக்கு இல்லை.

இப்படித் தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், தமிழீழ மக்களின் அவலங்கள் தொடர்பிலும் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற உணர்வலைகளை இல்லாது ஒழிக்கவே புலிகள் அங்கிருந்து ஆயுதங்களைக் கடத்துகின்றனர் என்ற பிரசார முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது என்றும் தமிழ்ச்செல்வன் கூறியிருகின்றார்.

சிங்கப்பூரில் வெளியாகும் 'தமிழ் முரசு' நாளிதழுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நீண்ட செவ்வி ஒன்றை அளித்திருக்கிறார். அந்தச் செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு:-

(04 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் கேடயமாகப் பயன்படுத்துகிறது அரசு!

## தமிழ்க் கூட்டமைப்பு குற்றச்சாட்டு; சம்பவத்துக்கு வருத்தம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

இலங்கை அரசு வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் மனித கேடயமாகப் பயன்படுத்த முனைகின்றதா?

அரசின் விவேகமற்ற செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார்.

இராணுவப் படைகளின் தளபதிகளும், பாதுகாப்பு தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவும் சர்வதேச சமூகத்தையும் தென்பகுதி சிங்களவர்களை ஏமாற்றிவிட்டனர்.

உண்மைக்கு மாறான சம்பவங்களை திரித்து கூறியதாலேயே வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற அசம்பா

(04 ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸியிலிருந்து அகதிகள் 83 பேரையும் திருப்பி அழைக்க அரசு தீவிர முயற்சி

## அங்கு உரிய நவடிக்கை எடுக்க அமைச்சர் நிமால் விரைவு

சிட்னி, மார்ச் 1

ஆஸ்திரேலியாவிடம் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கைத் தமிழர்களை மீண்டும் நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதற்காக அந்நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தீவிர முயற்சியில் இலங்கை அரச உயர்மட்டக்குழு ஈடுபட்டிருக்கிறது.

இலங்கை அரசின் பிரதிநிதியாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு நடத்துவதற்காக அங்கு விரைந்திருக்கிறார்.

அகதிகளைத் திருப்பி அழைக்க எடுக்கப்படும் முயற்சியில் முன்னாள் படைத் தளபதியும், இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதுவருமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் முக்கிய பங்கு வகிக்கிறார்.

ஓரிரு முஸ்லிம்கள் உட்பட இலங்கைத் தமிழர்கள் 83 பேர் ஆஸ்திரேலியக் கடற்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்களை எதிர்த்து ஞாயிறன்று ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 1

நாட்டில் அதிகரித்து வரும் ஊழல் மோசடிகள், மனித உரிமை மீறல்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புகள் என்பவற்றை எதிர்த்து - அவற்றைக் கண்டிக்கும் முகமாக - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த ஐக்கிய தேசியக்கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ள இந்த ஆர்ப்பாட்டம் தொடர்ந்து பல இடங்களிலும் முன்னெடுக்கப்படும் என்று

(04 ஆம் பக்கம் பார்க்க)

# விசேட அதிரடிப்படையுடன் கல்லடியில் புலிகள் மோதல்

கொழும்பு, மார்ச் 01

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. மோதலில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 3 பேர் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் கல்லடியில் உள்ள விசேட பொலிஸ் அதிரடிப் படை முகாம்மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனையடுத்தே விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் பதில் தாக்குதலை மேற்கொண்டனர். அச்சமயம் அங்கு மோதல் வெடித்தது என்று

(04 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நான்கு முகாம்கள் திருமலையில் படை வசமாம்

## இராணுவப் பேச்சாளர் நேற்றுத் தகவல்

கொழும்பு, மார்ச் 01

திருகோணமலையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நான்கு முகாம்களை இராணுவத்தினர் கடந்தவாரம் கைப்பற்றியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின்போது கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

திருகோணமலையில் இருந்து படையினர் மீது புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தப் பயன்படுத்திய நான்கு முகாம்களைப் படையினர்

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 1st IN Com G.A.Q — யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
* பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புதிய ஆண்டிற்கான பதிவுத்திகதி மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.
* பேராதனைக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

நிர்வாகி
எஸ்.அருள்நங்கை.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(58468)

## Jaffna College Institute of Agriculture
## DIPLOMA IN AGRICULTURE
## விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி

ஒரு வருட கால விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ளவிரும்பும் அல்லது தொழில் வாய்ப்பை மேற்கொள்ள விரும்பும் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்த 17-25 வயதுக்கிடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சி நெறி இலவசமாக வழங்குவதுடன் உதவு தொகையும் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 07.03.2007 காலை 9 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமைப்பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன்

(சி-52106)

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், கன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பொறுப்பாசிரியர் பா. உதயசேகர் அவர்களின் புதல்வன் **துஷிகேசன்** அவர்களின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(58480)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### தம்பிப்பிள்ளை சின்னம்மா

அன்னார் நாகமணி - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நாகமுத்து, கந்தையா, ஆத்மஜோதி முத்தையா, அருமைநாயகம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

**வாழும்போது அவரை நேசித்த நாம்,**
**மரணத்திலும் அவரை மறவாதிருப்போமாக**
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

"ஆத்மஜோதி வீதி"
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
(58474)

அன்புடன் நினைவு கூரும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராசா தங்கரத்தினம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியில் வசித்தவரும் தற்போது கோண்டாவில் இருபாலை வீதியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய செல்வராசா தங்கரத்தினம் 27.02.2007 செவ்வாய்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் சிவநாயகமூர்த்தி (முன்னாள் கல்வி அதிகாரி, நல்லூர்), கமலாம்பிகை, பராசக்தி, அன்னபூரணி ஆகியோரின் சகோதரியும் தனலக்சுமி, பாலசிங்கம், சண்முகம், சச்சிதானந்தம் ஆகியோரின் மைத்துனியும் மகாலக்சுமி (ஆசிரியர், முத்துத்தம்பி மகாவித்தியாலம்), கணேசலிங்கம், புவனேஸ்வரி (ஆசிரியை, நுகேகொடை த. வித்தியாலயம்), குகதாசலிங்கம் (புவனதாஸ் எலக்றோ பிளேட்டிங் வேக்ஸ் சொப்), ஸ்ரீ நாகேஸ்வரன் (ஆசிரியர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), கதிர்காமலிங்கம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சிவகுமார், காலஞ்சென்ற அரிதரகுமார் மற்றும் கருணாகரன் (ஐ.சி.ஆர்.சி - வவுனியா) ஆகியோரின் தாயும் சிவபாதம் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), சந்திராதேவி, சிவராசா (தபால் அதிபர், கொழும்பு), நீலாம்பிகை, தர்மராணி, சாவித்திரி, ருக்குமணி, அமரர் வசந்தகுமாரி ஆகியோரின் மாமியும் சாரதா, சிவகௌரி, புவனதாஸ் (சென். ஜோன்ஸ்), லஜிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), சிவானுஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சிவகஜானன் (சென். ஜோன்ஸ்), ஜீவசுதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), நிரோஜன், திலீப்குமார், பிரவீன், ஆகாஷ், யாழினி, ஜனகன், தர்ஷாயினி, ஆரூரன் (பொறியியலாளர், கொழும்பு), சஷஸ் (T.O. -பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். தொ.பே.: 0779626141.

தகவல்:
மக்கள், மருமக்கள்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
க. சிவபாதம் அவர்களின்
அன்பு மாமி
திருமதி **தங்கரத்தினம் செல்வராசா**
அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள்.
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.
(58497)

## ஆசிரியர்கள் தேவை

ஆண்டு 9, 10, 11 சமூகக்கல்வி
ஆண்டு 6, 7, 8 வரலாறு, புவியியல், குடியுரிமை
ஆண்டு 9, 10, 11 ஆங்கிலம்
ஆண்டு 9, 10, 11 சமயம்

**தொடர்புகளுக்கு:**
**0776685138**
நல்லூர் பிரதேசங்களுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

## பரம்சோதி வைத்திய நிலையம் & விசேட சித்தா கிளினிக்

142. இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

(விசேட ஆயுர்வேத சிகிச்சை மையம்)
* நாட்பட்ட, கைவிட்ட நோய்களுக்கான விசேட சிகிச்சைகள் வழங்கப்படும்
* தூரஇடத்து நோயாளர்களுக்கான தங்குமிட வசதிகள்.
* அமைதியான சூழலில் 42வருட அனுபவம் வாய்ந்த வைத்தியர்களின் கிளை நிறுவனம்.

### வீடு உடன் வாடகைக்குண்டு

புதிதாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடனான மேல் மாடியுடன் சேர்ந்த வீடு உடனடியாக வாடகைக்குண்டு.
Dr. T.Kulasingam
7/1, நந்தாவில் லேன், கொக்குவில்கிழக்கு,
கொக்குவில் (பரியன்லேன் அருகு) தொ.பே.: 0779793310

### வீடு விற்பனைக்கு

கொக்குவில், பூநாறி மரத்தடி சபாபதி வீதியில் 3½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
இ.ஆனந்தன், செட்டிவளவு லேன், இணுவில் மேற்கு, இணுவில். தொ.பே. 021 222 3262.

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு பிரதான வீதியில் 4 3/4 பரப்புக்காணி, வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: தொ.பே. 094-11-4949234
மின்னஞ்சல் :jeeva66ss@yahoo.com


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sigambaradi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222432
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publications) Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX
Course Fee :2000/=

ஒரேநாளில் ஆரம்பம் : 05/03/2007
ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Batch I- 02/03/2007, Batch II- 03/03/2007
Batch III- 04/03/2007, Batch VI- 07/03/2007


## மரண அறிவித்தல்

### கந்தசாமி றோசம்மா

சந்தைவீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த கந்தசாமி றோசம்மா நேற்று (28.02.2007) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் மனோறஞ்சிதமலர், லோகநாயகி, அகிலாண்டேஸ்வரி, சச்சிதானந்தன், காலஞ்சென்ற சௌபாக்கியவதி, மற்றும் கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் பாலபரமேஸ்வரன், செல்லத்துரை, விமலாதேவி, நந்தினி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2007) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.சச்சிதானந்தன் (மகன்).
தொ.பே. [illegible]
சந்தைவீதி, உடுப்பிட்டி.

## கண்ணீர் அஞ்சலி

யா/ அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலை
ஆசிரியை திருமதி சந்திரகலா ஸ்ரீதரன்
அவர்களின் தந்தை
### கிருஸ்ணபிள்ளை எதிர்வீரசிங்கம்
அவர்களின் மறைவையிட்டு, துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை ஆசிரியர்
நலன்புரிச் சங்கம்.
(சி-52117)

## துயர் பகிர்வு

எமது கல்லூரி ஆசிரியர் பா. உதயசேகர் அவர்களின்
புத்திரன் **உதயசேகர் துஷிகேசன்**
26.02.2007 அன்று திடீர் மரணமடைந்த செய்திகேட்டு, நாம் அதிர்ச்சியடைவதுடன் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரி. (58483) - ஆசிரிய வட்டம்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி செல்வராஜா தங்கரத்தினம்

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி மகாலக்சுமி சிவபாதம் அவர்களுடைய அன்புத் தாய் திருமதி செல்வராஜா தங்கரத்தினம் அவர்கள் 27.02.2007 அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் செ.ஸ்ரீநாகேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாய்
### திருமதி செல்வராசா தங்கரத்தினம்
அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயரடைவதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
(58482)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### முத்தையா சுவேந்திரராசா
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1941-12-15 | 2007-01-30 |

"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"
உமது ஆத்மாவை விட்டு ஆருயிர் பிரிந்து 31 நாள் ஆனாலும் ஆறவில்லை எம் துயரம். உமது ஜீவன் நித்தியத்தில் இளைப்பாற என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (01.03.2007) வியாழக்கிழமை அவரது வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனவிருந்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

உமது பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

தகவல்:
பெறாமக்கள்,
கேணியடி லேன், (பள்ளத்தடி)
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(58495)

## 45 ஆம் நாள் நினைவும் சபிண்டீகரண அழைப்பும்



### ஆறுமுகம் மார்க்கண்டு

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 31.08.1943 | 16.01.2007 |

திதி: பூர்வபக்க துதியை

கடந்த 16.01.2007 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் ஆறுமுகம் மார்க்கண்டு அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள். இன்று (01.03.2007) வியாழக்கிழமை நண் பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சப்பச்சி மாவடி,
சாவகச்சேரி.
(56447)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## இலங்கை விவகாரத்துக்குள் பிறசக்திகளை இழுக்கும் முயற்சி

மத்திய கிழக்கின் பிரபல்யம் மிக்க தொலைக்காட்சிச் சேவையான 'அல் - ஜஸீரா' நேற்றுக் காலை தனது 'இன்சைட் ஸ்டோரி' என்ற நிகழ்வில் இலங்கை விவகாரம் தொடர்பாக மூன்று முக்கிய அரசறிவியல் பிரமுகர்களை ஒரே சமயத்தில் இணைத்து நடத்திய கலந்துரையாடலில் அந்நிபுணர்கள் தெரிவித்த முக்கிய கருத்து ஒன்று இப்போது குறிப்பிடத்தக்க அம்சமாக வந்திருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு நோர்வே அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட அமைதி முயற்சிகள் இப்போது முழு அளவில் தேக்கமடைந்து பயனற்றுப் போகும் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டன. இந்நிலையில் நோர்வேயின் அனுசரணைப்பணி அமைதித் தீர்வுக்கு சம்பந்தப்படாததாக - அல்லது பொருத்தமற்றதாக - (Irrelevant) மாறி வருகின்றது என்ற சாரப்பட அந்தக் கலந்துரையாடலில் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆகையினால் நோர்வேக்கும், இலங்கை அரசு, விடுதலைப்புலிகள் ஆகிய தரப்புக்கும் அப்பால் புதிய தரப்புகளை இதில் நேரடியாகச் சம்பந்தப்படுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளதா என அல் - ஜஸீராவின் கலந்துரையாடலின் இணைப்பாளர் சம்பந்தப்பட்ட அரசியல்துறைசார் வல்லுநர்களிடம் கேள்வி எழுப்பினார்.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் அனுசரணைப்பணிக்கு முன்னர் பொறுப்பாகக் கடமையாற்றியவரும் அந்நாட்டின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடார் ஹெலக்ஸன் முதலில் பதிலளித்தார்.

"அமைதி முயற்சிகளை ஆரம்பித்த சமயத்தில் எங்களையும் (நோர்வேயையும்) இந்த இரு தரப்பையும் தவிர, வேறு தரப்புக்களையோ கட்சிகளையோ எங்களால் இதில் சம்பந்தப்படுத்த முடியவில்லை. அதற்கு அப்பால் செல்ல நிலைமை இடமளிக்கவில்லை. மேலும் புதிய தரப்புகளை இணைப்பது தான் இன்றைய கட்டாயம் என்றால் அது குறித்துப் பரிசீலிக்கலாம்." - என்ற சாரப்பட ஹெலக்ஸன் பதிலளித்தார்.

பிரபல இராணுவத் தகவல் விமர்சகரும், இலங்கை இனமோதல் தொடர்பான இராணுவத் தகவல்கள் அடங்கிய பல நூல்களை எழுதியவருமான றோஹான் குணரத்ன, நோர்வே அனுசரணையுடனான அமைதி முயற்சிகள் அடங்கிப் போய்விட்டன என்ற சாரப்பட கருத்து வெளியிட்டார். இனிமேலும் அதை நம்பியிருப்பதில் அர்த்தமில்லை என்று குறிப்பிட்ட அவர், ஆகவே புதிய தரப்புகளை இந்த சமாதான முயற்சிக்குள் இழுத்து வரவேண்டும் என்றார். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் நேரடியாக அமைதி முயற்சியில் தலையிட வேண்டும். தமிழர் தரப்பில் அவர்களின் ஜனநாயக ரீதியான பிரதிநிதிகள் புலிகள் என்ற நிலைப்பாடு தவறானது. பிற தரப்புகளையும் இந்த முயற்சிக்குள் கொண்டு வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நோர்வேக்கு அப்பால் பிற நாடுகளையும் சக்திகளையும் நேரடியாக இந்த அமைதி முயற்சிக்குள் இழுத்து வரவேண்டும். மோசமடைந்து வரும் இலங்கை நிலைமையை - அப்பாவி மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படும் இந்த அவல நிலையை - உலகம் இனிமேலும் கைகட்டிப் பார்த்திருக்க முடியாது; பார்த்திருக்கவும் கூடாது. அதில் சர்வதேச சமூகம் நேரடியாகச் சம்பந்தப்பட வேண்டும். இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளை அடக்கி, வழிக்குக் கொண்டுவரக்கூடிய சக்தியுள்ள - வலிமையுள்ள - நாடுகள், இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட வேண்டும்." - என்ற சாரப்பட லண்டனில் வசிக்கும் இந்திய அரசறிவியல் ஆய்வாளரான பதான் என்பவர் அங்கு குறிப்பிட்டார்.

மொத்தத்தில் அந்தக் கலந்துரையாடலின் போக்கு, இலங்கையில் அமைதி முயற்சிகளுக்கு உயிரூட்டப்பட வேண்டும் என்றால் - மோதல் நிறுத்தப்பட்டு, யுத்த நிலை தவிர்க்கப்பட்டு, நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய நீதியான சமாதானத் தீர்வு எட்டப்பட வேண்டுமானால் - இப்போது செத்துக் கொண்டிருக்கும் நோர்வே அனுசரணைப் பணியை முற்றாக உதறித்தள்ளிவிட்டு, மேலும் சக்தியுள்ள பல தரப்புகளை (குறிப்பாக முக்கிய நாடுகளை) இவ்விடயத்துக்குள் நேரடியாகத் தலையிட வைக்க வேண்டும் என்பதாகவே அமைந்தது.

இது, வெறுமனே 'அல் - ஜஸீரா' நடத்திய அரசியல் கலந்துரையாடலின் கண்ணோட்டம் அல்லது சிந்தனைப் போக்கு ஆக அமைந்திருந்தால் இதற்கு அத்துணை முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவை இங்கு இல்லை.

ஆனால் இதுவே இலங்கை விவகாரம் தொடர்பான மேற்குலகின் கருத்து நிலைப்பாடாக உருவகிக்கும் ஒரு செல்நெறி உருவாகிவருவதை இப்போது ஓரளவுக்கு உய்த்துணரக்கூடியதாக இருக்கின்றது. அதனால் இவ்விடயம் முக்கியத்துவம் பெறுகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேச அபிப்பிராயம் உறுதியாக ஒன்று திரண்டு வரும் இச் சமயத்தில் -

உலக வல்லரசுகளும் வல்லாதிக்க சக்திகளும், அந்நோக்கில் ஒற்றுமைப்பட்டு, முழுப்பலத்துடன் செயலாற்ற முறுகி நிற்கும் இவ்வேளையில் -

இலங்கையில் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முழுப் பயங்கரவாதமாகச் சித்திரித்து அடையாளப்படுத்துவதன்மூலம், உலகை - சர்வதேச சமூகத்தை - தமிழர்களின் அந்தப் போராட்டத்துக்கு எதிராகத் திருப்பிவிடும் தந்திரோபாயச் சதியில் தமிழர் விரோத சக்திகள் முனைப்பாக உள்ளன.

இந்த உள்நோக்குடன், சர்வதேச சமூகத்தைப் புலிகளுக்கு எதிராக இவ்விடயத்தில் இழுத்து வந்து இணைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவே, அச்சக்திகள் நோர்வேயின் அனுசரணைப் பணியின் அடிப்படையிலான தற்போதைய சமாதான முயற்சிகளை செல்லாக்காசாக்கி, செயலிழக்க வைத்து, சாகடிக்க முயல்கின்றன. செத்துவிட்டதாகக் காட்ட எத்தனிக்கின்றன.

இந்தச் சூழ்ச்சியின் உள்ளார்ந்தம் குறித்துத் தமிழர்களின் தலைமை சிந்தித்து, அதற்குப் பதிலான நகர்வுகளை மேற்கொண்டு, இந்தத் தந்திரோபாய நகர்வை முறியடிக்கத் தன்னை உரியமுறையில் வழிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நடுநிலைப் போக்குடைய நோர்வேயை ஓரங்கட்டி -

ஈழத்தமிழரின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டத்தை முழு அளவில் எதிர்க்கின்ற வல்லாதிக்க சக்திகளை இதற்குள் நேரடியாக இழுத்து வந்து, தமிழர்களுக்கு எதிராக நிறுத்தும் முயற்சிக்கு ஆரம்பத்திலேயே ஆப்பு வைப்பது அவசியம். அதற்கு, நோர்வேயின் பங்களிப்புடன் கூடிய அமைதி முயற்சிகளுக்கு உயிரூட்டுவதும் ஒரு பங்களிப்பாகும்.

## மன்னார் பெரியமடுவில் கிளைமோர் தாக்குதல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்

கிளிநொச்சி, மார்ச்.1

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பெரியமடு, பரப்புக்கண்டல் பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயம் அடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அந்தோனி முத்து ஹென்றி (வயது 43), ஆசிரியையான அவரது மனைவி ஹென்றி யூட் கிறிஸ்ரா (வயது 43), அவரது பிள்ளைகளான மாணவன் ஹென்றி சுரேந்திரன் (வயது 13), ஹென்றி பியோறி (வயது 3) ஆகியோரே காயமடைந்தவர்களாவார்.

இவர்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா படையினரின் ஆழ ஊடுருவும் அணியினரே இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்று விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் விளாத்திக்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் அதிபர் ஒருவர் கொல்லப்பட்டதும் கோட்டக்கல்வி அதிகாரி ஒருவர் காயமடைந்ததும் தெரிந்ததே.

## வீட்டில் வைத்து குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மார்ச்.1

குடும்பஸ்தர் ஒருவர் காலை வேளையில் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இயற்கைக் கடனை முடித்துவிட்டு மலகூடத்திலிருந்து வெளியேறி வந்தபோது அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாக அறியவந்தது.

இச் சம்பவம் நேற்று காலை 6மணியளவில் சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் இடம்பெற்றது.

இராஜேந்திரன் இளஞ்செல்வன் (வயது 30) என்பவரே பலியானவராவார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (1-202)

## மருந்துக் கலவையாளர் பயிற்சியில் சித்திபெற்றோர்

யாழ்ப்பாணம், மார்ச்.1

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பிராந்திய பயிற்சிக் கல்லூரியில் நடத்திய மருந்துக் கலவையாளர் பயிற்சி நெறியில் பங்குபற்றி பரீட்சையில் சித்தியடைந்த 37 மாணவர்களின் விவரங்கள் கொழும்பு சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை 'உதயன்' அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (203)

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு: இம்முறை நடத்துவது சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், மார்ச். 1

கடந்த வருடம் கற்று வெளியேறிய யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவை தற்போது நடத்துவது சாத்தியமில்லை என யாழ். பல்கலைக்கழக பதில் பதிவாளர் பி. கந்தசாமி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் படித்து தமது கற்கை நெறியை 2006ஆம் ஆண்டில் பூர்த்தி செய்தவர்களுக்கு அந்த ஆண்டின் இறுதியில் பட்டமளிப்பு விழா நடைபெறவேண்டும். ஆனால் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைபெறவில்லை. ஆனால் இவ்வாண்டின் முற்பகுதியில் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட போதிலும் இங்கு வெளி மாவட்ட மாணவர்கள் இன்னும் வந்து சேராததால் அது தற்போது சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் 2006ஆம் ஆண்டில் வெளியேறிய மாணவர்களின் எதிர் கால நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குரிய பட்டமளிப்பு விழாவுக்கு முன்னர் கொடுக்கப்படும் அத்தாட்சிப்பத்திரம் (Statement) வழங்கப்படுவதாகவும் பதில் பதிவாளர் மேலும் தெரிவித்தார். (அ-79)

## கப்பலில் செல்ல பயணச்சீட்டுப் பெற்றுத்தருவதாக மோசடி செய்த சந்தேகத்தில் இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச்.1

கப்பலுக்கு பயணச்சீட்டுப் பெற்றுத்தருவதாக கூடுதல் பணம் பெற்ற இருவரை விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது.

கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த தங்கவேலு கனகரத்தினம், சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த பரமசிவம் யோகராஜ் ஆகிய இருவரும் யாழ்.நீதிமன்றத்தில் பொலீஸாரால் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

ஜெரோம் கோகுலராஜ், இராமையா சுதாகரன், ஜோன் கெனடி ஆகியோரிடம் கப்பல் பயணத்துக்கு பயணச்சீட்டுப் பெற்றுத்தருவதாக ஒவ்வொருவரிடமும் 5ஆயிரம் ரூபாவை சந்தேக நபர்கள் பேரம் பேசினர் என்றும் -

முற்பணமாக 4ஆயிரத்து 500ரூபாவைப் பெற்றனர் என்றும் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இருவரையும் விசாரணை செய்த நீதிவான் இ.த. விக்னராஜா, அவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்ற பணத்தை அடுத்த தவணையில் அவர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் நீதிவான் தெரிவித்தார். (அ-1)

## அழுகிய நிலையில் உள்ளி விநியோகம்

நல்லூர், மார்ச்.1

தற்சமயம் பொதுமக்களின் பாவனைக்கென ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் வழங்கப்படும் உள்ளி பாவனைக்கு உகந்ததல்ல எனவும், வழங்கப்படுவதோ 1/4 கிலோ. அதுவும் அழுகிப் பழுதடைந்த நிலையில் உள்ளது எனவும் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். (அ-111)

## பொன்னாலைக் கடலில் செவ்வாய் முதல் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச்.1

கடந்த இரண்டு வார காலத்தின் பின்னர் பொன்னாலைக்கடலில் மீன்பிடிப்பதற்கு அப்பகுதி மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாணக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி வழங்கப்பட்ட பிரதேசம் பெரியளவில் மீன்பிடிப்பதற்கு உகந்ததல்ல எனவும் அவை மேலும் தெரிவித்தன.

கடந்த 21ஆம் திகதி முதல் குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டு அதன் பின்னர் நேற்று முன்தினம் தொடக்கம் பொன்னாலைக்கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. எனினும் ஏனைய பிரதேசங்களில் மீன்பிடிப்பது தொடர்பாக எந்த விதமான அறிவித்தலும் இன்னும் இல்லையென்று மீனவர் சமாச வட்டாரங்கள் மேலும் கூறின. (அ-8)

## முல்லை. அரச ஊழியருக்கு இன்று சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச்.1

முல்லைத்தீவில் இருந்து கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இன்று வியாழக்கிழமை காலை 9மணி முதல் யாழ்.கல்வி வலயத்தில் நிலுவையுடன் கூடிய சம்பளம் வழங்கப்படவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவுள்ளது என்று யாழ். கல்வி வலயக்கணக்காளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கடந்த டிசெம்பர் மாதம் வந்தவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என்றும் கணக்காளர் மேலும் தெரிவித்துள்ளார். (1-203)

**நாளை**

மாசி - 18
வெள்ளிக்கிழமை
02.03.2007
திதி: சதுர்த்தசி
பின்னிரவு : 03.47
நட்சத்திரம் : ஆயிலியம்
பிற்பகல் : 04.17
சுபநேரம் : 06.27 - 07.57
ராகுகாலம் : 10.57 - 12.27

## புலிகள் மீதான அணுகுமுறையை சர்வதேச சமூகம் தீவிரப்படுத்த வேண்டும்

### மட்டக்களப்புத் தாக்குதலைக் கண்டித்து ஈ.பி.டி.பி அறிக்கை

சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் மீதான அணுகுமுறையை தீவிரப்படுத்தும் அதேவேளை, தமிழ் மக்களின் அவலம் தீர்வதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பில் அமைச்சர் மற்றும் ராஜதந்திரிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து ஈ.பி.டி.பி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

அனர்த்த நிவாரண முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீது மட்டக்களப்பில் புலிகள் நடத்திய தாக்குதலை ஈ.பி.டி.பி வன்மையாகக் கண்டிக்கிறது.

பதற்றமான சூழலுக்கு மத்தியில் மட்டக்களப்பில் அகதி முகாம்களில் அவலப்படும் மக்களின் நலன்கள் தொடர்பிலும், அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் நிலைமைகளை ஆராய்வதற்காகச் சென்ற தூதுவர்கள் அடங்கிய உயர் மட்டப்பிரதிநிதிகள் மீது புலிகள் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலை நியாயப்படுத்தும் விதமாக தமக்கு இவ் உயர் மட்டக்குழுவின் வருகை தொடர்பில் முன் அறிவித்தல் செய்யவில்லை என்டதானது புலிகள் சர்வதேச சமூகத்தை எச்சரிப்பதற்காக நடத்திய தாக்குதல் இது என்று நிரூபணமாகின்றது. புலிகளின் பயங்கரவாதச் செயல்களில் ஒரு பகுதியாகவே இந்தத் தாக்குதலை கருதவேண்டியுள்ளது. ஒப்பந்தத்தை மதிப்பதாகவும், வலிந்த தாக்குதல்களை தாங்கள் நடத்துவதில்லை என்றும் புலிகள் செய்துவந்த பொய்ப்பிரசாரம் இன்று சர்வதேசத்தின் முன்னால் அம்பலமாகிப் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினையைப் புலிகள் பயங்கரவாதப் பிரச்சினையாக மாற்றியிருக்கிறார்கள் என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும். எமது மக்களின் நலனில் அக்கறை கொண்டு இக்குழுவினர் சென்றபோது நடத்தப்பட்ட இத்தாக்குதலை, ஈ.பி.டி.பியும், தமிழ் மக்களும் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். இத் தாக்குதலானது தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களைப் பின் தள்ளுவதாக அமைந்தவிடக் கூடாது என்றும் ஈ.பி.டி.பி, சர்வதேச சமூகத்திடம் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்துக்கொள்கிறது - என்றுள்ளது.

### குடாநாட்டின குட்டிச் செய்திகள் — யாழ்ப்பாணம்

## யாழ்.இந்துவில் கல்விச் செயற்பாடுகள் நேற்று வழமைக்கு

யாழ்.இந்துக் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் நேற்று வழமைபோன்று நடைபெற்றன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தமை தெரிந்ததே.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்துக் கல்லூரியை அண்டியதாக வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் இதனையடுத்தே தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக அவர்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

எனினும் நேற்று வழமை போன்று ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்குச் சமுகமளித்திருந்தனர். கல்விச் செயற்பாடுகளும் எந்தவிதமான தடையுமின்றி நடைபெற்றன. (அ-8)

## சமாசத்தில் பொருள் விநியோகம் நிறுத்தம்

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த உணவுப் பொருள்கள் விநியோகம், கடந்த இரண்டு தினங்களாக நிறுத்தப்பட்டுள்ளமையால் அங்கு பொருள்களை பெறுவதற்குச் சென்றோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

கடந்த சில மாதங்களாக ப.நோ.கூ. சங்கங்களில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்திற்கு மேலதிகமாக கூட்டுறவுச் சங்கச் சமாசமும் உணவுப் பொருள்களை விநியோகித்து வந்தது.

ப.நோ.கூ. சங்கப் பிரிவுகள் ரீதியாகவும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் இந்தப் பொருள் விநியோகம் நடைபெற்று வந்தது.

சமாசத்தில் பொருள்களின் இருப்பு முடிவடைந்துள்ளமையே விநியோகம் நிறுத்தப்பட்டமைக்கு காரணம் என்று சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-8)

## மணல் கடத்தியதாக மூவருக்கு விளக்கமறியல்

சட்டவிரோத மணல் கடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மூவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துன்னாலையைச் சேர்ந்த பாலேந்திரன் சுபாகரன், கந்தையா பாலகிருஷ்ணன், ஆறுமுகம் கணேஸ்வரன் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஆசிரிய அலோசகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கை ஆசிரிய சேவை I ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

ஆங்கிலம், சித்திரம், முறைசாராக் கல்வி, தகவல் தொழில்நுட்பம், ஆரம்பக்கல்வி, கிறிஸ்தவம், இரண்டாம்மொழி (சிங்களம்), சைவ சமயம் ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் 12ஆம் திகதிக்க முன்னர் அதிபரின் சிபார்சுடன் அனுப்பிவைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

## புற்றுநோய்ப் பிரிவில் பூரணை தின நிகழ்வு

யாழ்.ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதி நடத்தும் பூரணை தின நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவில் நடைபெறவுள்ளன. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மவ்பிம' பத்திரிகையின் நிதிப் பணிப்பாளர் கைது!

'மவ்பிம' வாரப் பத்திரிகை நிறுவனத்தின் நிதிப் பணிப்பாளர் துஷந்த பஸநாயக்கா பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்தும், மனித உரிமை மீறல்கள், ஊழல் மோசடிகள் குறித்தும் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் பயங்கரவாதிகளைக் கைதுசெய்வதற்கே கொண்டுவரப்பட்டது. பத்திரிகையாளர்களையோ, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களையோ கைதுசெய்வதற்கு அல்ல என்று சர்வதேச பத்திரிகை சுதந்திர இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - துஷந்த கைதுசெய்யப்பட்டதற்கான காரணங்களை தெளிவுபடுத்துமாறு சுதந்திர ஊடக இயக்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாங்கள் ஊடகத்துறையின் பிரதிநிதிகளாக இருப்பதால் துஷந்தாவின் கைதின் பின்னணியில் உள்ள காரணங்களை அறிய எமக்கு உரிமை உள்ளது - என்று அதன் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை - 'மவ்பிம'வின் பத்திரிகையாளரான முனுசாமி பரமேஸ்வரி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த நவம்பரில் கைதுசெய்யப்பட்டு, இன்னும் விடுவிக்கப்படவில்லை. (அ)

## விசே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

மோதல் நடந்த பகுதியில் பின்னர் தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப்புலி உறுப்பினர் களின் மூன்று சடலங்கள், கிளைமோர் குண்டு ஒன்று, ரி-56 ரகத் துப்பாக்கி, கைக்குண்டு, சைனைட் குப்பிகள் ஆகியவற்றை மீட்டனர் என்றும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (க)

## மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும், சட்ட விரோதமாகவும் இலங்கையர்கள் பலர் வருகின்றனர். அவர்கள் இங்கிருந்து வெளியே செல்ல பல வாயில்கள் உள்ளன. அவ்வாறு செல்வது சாத்தியமாகவும் உள்ளது. இதற்கு முன்னரும் இலங் கையர்கள் பலரை நாம் பிடித்திருக்கின்றோம். அவர்கள் மகசார் (makassr) பகுதியில் தங்கவைக்கப்பட்டனர்.''

- இவ்வாறு குடிவரவுத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையில் தாங்கள் கடத்தப்பட்டுக் கொல்லப் பட்டுவிடுவார்கள் என அஞ்சி மேலும் பல தமிழர்கள் இந்தோனேசியா ஊடாக ஆஸ்திரேலியா செல்லக் காத்திருக்கின்றனர் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. (ஐ)

## புலிகளின் நான்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றியுள்ளனர்.

திருகோணமலை - அநுராதபுர பிரதான வீதிக்கும் திருகோணமலை - நிலாவெளி வீதிக்கும் இந்த முகாம் களால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டன. இந்த வீதியால் பயணிப்பவர்கள் புலிகளிடமிருந்து ஆபத்துகளை எதிர் நோக்கினர். இதன் காரணமாக இம்முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி படையினர் அவற்றைக் கைப்பற்றினர்.

**வவுணதீவிலிருந்து மக்கள் இடம்பெயர்வு**

இதேவேளை, மட்டக்களப்பு வவுண தீவில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இதுவரை மூவாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ளனர். இவர்களுக்கான அனைத்து வசதிகளையும் படையினர் செய்து வருகின்றனர் - என்றார். (ஐ)

## ஆஸியிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு அந்நாட்டின் கிறிஸ்மஸ்தீவில் கடற்படைக் கப்பல் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சட்டவிரோத குடியேற்ற வாசிகள் விடயத்தில் கடும்போக்குக்கொண்ட ஆஸ்திரேலிய அரசு இந்த அகதிகள் 83 பேரையும் இந்தோனேஷியா வழியாக மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில், மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு தாங்கள் கடத்தப்படவும், கொலை செய்யப்படவும் கூடும் என்று தஞ்சம் கோரும் இலங்கையர்கள் கூறியிருக்கின்றனர். பெரும்பாலும் இளவயதினரான இவர்கள் அனைவரும் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், மாணவர்கள் பலரும் கூட அவர்களுள் அடங்கியுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்று இவர்கள் கூறியிருப்பதை இலங்கை அரசு மறுத்திருக்கின்றது. பொருளாதார நலன் கருதி வெளிநாட்டில் தஞ்சம் கோர இவர்கள் முற்பட்டுள்ளனர் என்றும், இலங்கை நிலைமை தொடர்பாக இவர்கள் தெரிவித்திருக்கும் கூற்று ஆதாரமற்றது என்றும் இலங்கையின் சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

**அகதிகள் என்று கூறுவது உண்மையல்ல**

''இவர்கள் தங்களை அகதிகள் என்று கூறுவதில் உண்மை இல்லை என்றே நான் நினைக்கிறேன். இவர்களுக்குப்பின்னால்விடுதலைப்புலிகள்செயற்படுகின்றனர் என்று சந்தேகிக்கிறோம். இவர்கள் உண்மையிலேயே அகதிகளாக இருந்தால் இலங்கைக்குக் கிட்டிய தொலைவிலுள்ள இந்தியாவுக்குச் சென்றிருப்பார்கள்.'' - என்றும் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருக்கின்றார்.

83 இலங்கையர்களையும் திருப்பி அனுப்புவதற்கு அழுத்தம் கொடுப்பதற்காக நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான இலங்கை நாடாளுமன்ற உறுப் பினர் குழு ஒன்று நேற்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸ்ஸாண்டர் டௌணரையும், அந்நாட்டின் சட்டமா அதிபரையும் சந்தித்துப் பேச இருந்தது.

தஞ்சம்கோரிய 83 பேரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான முயற்சியில் முன்னாள் படை அதிகாரியும் இந்தோனேஷியாவுக்கான இலங்கையின் தூதருமாகிய மேஜர்ஜெனரல் ஜானக பெரேராவும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

''தாங்கள் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப்படுவது குறித்து அகதிகள் அஞ்சவேண்டியதில்லை. அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்படும்'' என்று தூதர் ஜானக பெரேரா பி.பி.ஸிக்குத் தெரிவித்திருக்கிறார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகளை நாட்டினுள் அனுமதிப்பதில்லை என்ற தனது கொள்கையில் ஆஸ்திரேலிய அரசு உறுதியாக இருக்கிறது என்று அந்நாட்டின் குடிவரவுத் திணைக்கள அதிகாரி உறுதிபடத் தெரிவித்திருக்கிறார். அந்நாட்டுப் பிரதமர் ஜோன் ஹவார்ட்டும் இதனை உறுதிசெய்திருக்கிறார். எனினும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் இவர்களது பாதுகாப்பு நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை சுயாதீன தரப்புகள் ஊடாக உறுதிப்படுத்திய பின்னரே பெரும்பாலும் அகதிகளை ஆஸ்திரேலியா திருப்பி அனுப்பும் என்று கூறப்படுகிறது.

83 பேரும் இந்தோனேஷியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டாலும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளில் அந்நாடு சம்பந்தப் பட்டிருக்கவில்லை. எனவே இந்த அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டிய கட்டாயம் இந்தோனேஷிய அரசுக்கு கிடையாது.

இந்தப் பின்னணியிலேயே அகதிகளை மீண்டும் எப்படியாவது இலங்கைக்குத் திருப்பி அழைத்துவிட இலங்கை அரசு தீவிரமாக முயன்று வருகிறது என்று விடயமறிந்தவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## தமிழ்நாட்டிலிருந்து வெடிபொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*கேள்வி:* அமைதி உடன்பாடு ஏற்பட்டு ஐந்தாண்டுகள் ஆகியிருக்கும் நிலையில், அமைதி உடன்பாட்டை நீங்கள் தொடர்ந்து மதிக்கப்போகின்றீர்களா அல்லது மீறப் போகின்றீர்களா?.

*பதில்:* இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறியதும் செயலிழக்கச் செய்ததும் ஸ்ரீலங்கா அரசாங்கமே. தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் பொறுத்த வரையில் இந்த உடன்பாடு என்பது பாரிய எதிர்பார்ப்புக்கும் நம்பிக்கைக்குரியதுமான ஆவணமாகவே இருந்தது. ஆனால் சிறிலங்கா அரசு அதில் உள்ள விதிகள் அனைத்தையும் மீறி அதனைச் செயலிழக்கச் செய்திருக்கின்றது. அந்த விதத்தில் இக் கேள்வியை சிறிலங்கா அரசாங்கத்தை நோக்கி கேட்பதே பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

*கேள்வி:* இருதரப்புமே ஒப்பந்தத்தை மீறியதுதான் வன்முறைகள் அதிகரிக்கக் காரணம் என்று நோர்வே கூறியிருக்கின்றது. இருதரப்பும் மீண்டும் அமைதியில் நாட்டம் காட்டினால் பேச்சுவார்த்தையை முன் னெடுக்கத் தயார் என்றும் நோர்வே கூறுகின்றது. நோர்வேக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

*பதில்:* இரு தரப்பிலும் யுத்த நிறுத்த மீறல்கள் நடைபெற்றது உண்மைதான். ஆனால் அந்த மீறல் களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சீரானதொரு முறையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படுவதற்காக விடுதலைப்புலிகள் எப்போதுமே அர்ப்பணிப்புடன் செயற் பட்டார்கள்.

ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள அடிப்படை விதிகள் அனைத்தையுமே தகர்த்தெறிந்து விட்டு இன்று சிறிலங்கா அரசாங்கம், எமது மக்கள் மீது படுகொலைகளையும், வன்முறைகளையும், யுத்த நிறுத்த உடன்பாட்டை முற்றாகச் சிதைக்கும் விதத்தில் நேரடி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் எமது கட்டுப் பாட்டுப் பிரதேசங்களிற்குள் சிறிலங்கா அரச படைகள் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான மக்களை கொன்றும் பல இலட்சக் கணக்கான மக்களை அவர்களின் சொந்த வாழிடங்களில் இருந்து வெளியேற்றியும் பெரும் மனி தப் பேரவலத்தை நடத்தி வருகின்றது. இதுவே இந்த யுத்த நிறுத்த உடன்பாடு முற்றாக செயலிழக்க காரணமாகியது. இந்தப் பின்னணியை நோர்வே புரிந்துகொள்ளும் என்றே நம்புகின்றேன்.

## வெளிநாட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதங்களுக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு ஏற்பட்ட நேரடிப்பாதிப்பு மற்றும் அவர்களின் மனத்தாக்கங்களுக்கும் இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசு கிழக்கு மாகாணத்தின் தற்போதைய கள நிலைமைகளை நன்கு அறியும். ஆனால், கிழக்கு மாகாணத்தை புலிகளிடமிருந்து கைப்பற்றிவிட்டோம். நிலைமைகள் சீரடைந்துவிட்டன. பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது என்று கூறிக்கொண்டு சிங்களக் கொடிகளை நாட்டி அரச ஊடகங்களின் மூலம் படம் காட்டுகின்றனர்.

தென்பகுதி சிங்கள மக்களின் வாக்குகளை ஸ்திரப் படுத்திக் கொள்ளும் நோக்குடன் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பிரசாரம் பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது.

**இராஜதந்திரிகளை அழைத்துச் சென்றது தவறு**

தினசரி பரஸ்பர தாக்குதல்கள் இடம் பெற்று வரும் இப்பிரதேசத்துக்கு இராஜதந்திரிகளை அழைத்துச்செல்லக்கூடாது என்று அரசுக்கு நன்றாகவே தெரியும்.

இப்படியான நிலையில் வெளிநாட்டு இராஜதந்திரிகளை அதுவும் இராணுவ ஹெலிக்கொப்டர்களில் அழைத்துச் சென்றுள்ளது தவறாகும். இராணுவ ஹெலிக்கொப்டர்களில் இராஜதந்திரிகள் பிரயாணம் செய்வார்கள் என்று எவரும் கனவு காணமுடியாது.

அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சர்வதேச சமூகத்தின் மத்தியில் குரோதங் களை ஏற்படுத்தும் ஒரு திட்டமிட்ட சதியாகவும் இருக்கலாம்.

புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகின்றனர் என்று கூறும் அரசு, வெளிநாட்டு இராஜதந்திரிகளைக் கேடயமாக பயன்படுத்துகின்றனரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டினார்.

அரசு கடைசிவரையில் இராணுவ நடவடிக்கையின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. இப்பொழுதும் கூட காலம் கடந்துவிடவில்லை. உடனடியாக சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோருகின்றது. இதற்கு சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். (க)


## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய உபசெயலாளர் செ.ஸ்ரீநாகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செல்வராசா தங்கரத்தினம்**

அவர்கள் மரணமான செய்திகேட்டு நாம் துயர் அடைகின்றோம்.

அவர்களின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்ரீ வில்வலிங்க மகா கணபதி கோவில்.*
*(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்),* தர்மகர்த்தா சபை,
*யாழ்ப்பாணம்.*


## தெற்கு ஆழ்கடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கவில்லை. அக்கப்பல் மீது சந்தேகம் ஏற்பட்டதும் ரோந்துநடவடிக்கையில் - ஈடுபட்ட படையினர் அக்கப் பலுடன் தொலைத்தொடர்பு சாதனத்தின் மூலம் தொடர்புகொண்டனர்.

தமக்கு இக்கப்பல் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. உடனடியாகச் சோதனையிட வேண்டும். அருகில் உள்ள காலி துறைமுகத்தை நோக்கி செலுத்தவும் என்று கடற்படையினர் அக்கப்பலில் இருந்தவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டுள்ளனர்.

அவர்கள் பிழையான தகவலைத் தெரிவித்து கப்பலின் வேகத்தை அதிகரித்தனர். அத்தோடு கப்பல் திசைமாறிச் செல்ல ஆரம்பித்தது. இதனால் படையினர் அக்கப்பலை நோக்கி எச்சரிக்கை வேட்டுத்தீர்த்தனர்.

இதனைத் தொடர்ந்து அக்கப்பலில் இருந்து படையினரை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. படையினர் திருப்பித் தாக்கியதில் கப்பல் தீப்பற்றிக் கொண்டது. இக்கப்பலில் பெருந்தொகையான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் இருந்திருக்கின்றன என்று நம்பப்படுகின்றது. பெரும் வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. பின்னர் கப்பல் கடலில் மூழ்கியது.

இக்கப்பல் மூலம் புலிகளுக்கு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இது தொடர்பாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மாத்திரம் புலிகளுக்காக வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கடத்தி வந்த ஒன்பது ட்ரோலர் படகுகளும் ஒரு பெரிய கப்பலும் அழித்தொழிக் கப்பட்டுள்ளன - என்றார் கடற்படைப் பேச்சாளர். (ஐ-7)

## மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி கடந்த மோத காலத்திற்கு முன்னரே நடத்தப்படவிருந்தது. எனினும் அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைப் பேணுவதற்காக - அதை முறியடிக்காத வகையில் ஐ.தே.க. ஆர்ப்பாட்டப் பேரணியை இடைநிறுத்தியிருந்தது என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் நிலவிவரும் ஊழல் மோசடி கள், மனித உரிமை மீறல்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புகள் என்பவற்றை மக்களின் முன்வைத்து இதற்கான தீர்வை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க ஐ. தே.கட்சி இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டப்பேரணியை நடத்தவுள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டது. (க)


**Hatton National Bank**

### அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் 30.11.2005 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படர்த/ காலாவதி திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருள்கள் 10.03.2007 சனிக்கிழமை அன்று இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ500) செலுத்தி அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதி திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

(சி.52120) -முகாமையாளர்.


## மரண அறிவித்தல்கள்

### இராசேந்திரம் இளஞ்செல்வன்

இளவாலை, பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் இளஞ்செல்வன் 28.02.2007 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இராசேந்திரம் - செல்வமணி தம்பதியரின் மகனும் இசைச்செல்வி, காலஞ்சென்ற இளங்குமரன், மற்றும் திருச்செல்வி ஆகியோரின் சகோதரனும் டர்மிளாவின் (பெற்றி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி) அன்புக்கணவரும் கோதையின் பாசமிகு தந்தையும் சண்முகநேசனின் மைத்துனரும் திரு.திருமதி பரஞ்சோதி, திரு.திருமதி செல்லத்துரை ஆகியோரின் மருமகனும் திருமதிகள் செல்லம்மா, செல்வநாயகி ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இளவாலை இல்லத்தில் இன்று (01.03.2007) வியாழக்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தாவத்தை,*
*இளவாலை.*

தகவல்:
திருமதி.இ.டர்மிளா (மனைவி).

### திருமதி சண்முகலிங்கம் நல்லைநாயகி



யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் நல்லைநாயகி 25.02.2007 அன்று காலமானார்.

அன்னார் திரு.திருமதி செல்லப்பா- செல்லம்மா தம்பதியரின் இளைய மகளும் காலஞ்சென்ற மீனாட்சி, காலஞ்சென்ற நல்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செ.சண்முகலிங்கத்தின் (இளைப்பாறிய லிகிதர், யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி) அருமை துணைவியும், கண்ணனின் (நல்லைக் கண்ணன்) பாசமிகு தாயும், தர்சினியின் அன்பு மாமியும், மீரன், மிதுளன், மயூரா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.03.2007 வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 9.30 மணிவரை **Hopital La Roseraie Aubervilliers** இலும் 10 மணிமுதல் 10.30 மணிவரை **Crematorium - Perela Chaise, Gambetta** விலும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல:
*0143521161,*
*0033668889901*

தகவல்:-
செ. சண்முகலிங்கம் (கணவர்)
ச. கண்ணன் (மகன்) பிரான்ஸ்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

861 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 09 13 22 42

27-02-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4876511 - 4892121

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 343,821 | 10/- | 3,438,210/- |
| 2 இலக்கங்கள் | 31,583 | 20/- | 631,660/- |
| 1 இல. + லக்கினம் | 31,253 | 30/- | 937,590/- |
| 2 இல. + லக்கினம் | 2,873 | 100/- | 287,300/- |
| 3 இலக்கங்கள் | 828 | 500/- | 414,000/- |
| 3 இல. + லக்கினம் | 83 | 5,000/- | 415,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,523,760/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 410,451 | | 8,547,260/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 4880475-5-44 |
| கேகாலை | 4891057-7-36 |
| மாத்தளை | 4884763-3-68 |
| அனுராதபுரம் | 4884353-0-97 |
| குருநாகல் | 4888752-0-15 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

### படிவம்

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
ஏஜூனம்ஸ் பிறின்ரேஸ், கந்தர்மடம்

### A/L 2009,08

கலை, வாத்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் நடைபெறுகின்றன.
BIO - Mr.K.G.அன்ரன்
CHE- Mr.M.A.நிரோஜன்
PHY -Mr.R. வர்ணன்
C/Ma- Mr.E.ஜெயக்குமார்
ECON - Mr.கஜீதரன்.
TAMIL- Mr.சிவா.
ENG - ஆசிரியர்.
SHAMROCK
ஈச்சமோட்டை வீதி,யாழ்.

### படிவம்

க.பொ.த (உ.த)ப் பரீட்சை ஆகஸ்ட் 2007 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

### எழுதுவினைஞர் தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு Cleark தேவை. விரும்பியவர்கள் கீழுள்ள நேரங்களில் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்.
சனி - ஞாயிறு : 7.00 a.m. - 5.00 p.m.

வடிரன் அக்காடமி
யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை முன்பாக)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org